வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 234 of 2003

வழக்கு சாட்சி - PW 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.கிருஷ்ணகுமார் | தொழில் | : | அஞ்சலக துனை கண்காணிப்பாளர் (ஓய்வு) |
| தந்தை பெயர் | : | பழனியப்பன் | வயது | : | |
| கிராமம் | : | ஈரோடு டவுன் | | | |
| தாலுக்கா | : | ஈரோடு | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 28.07.2025.

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை :** **நாள் : 28.07.2025.**

1) நான் தற்போது சென்னை அஞ்சலகத்தில் துனை கண்காணிப்பாளராக ஓய்வு பெற்று மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். திருப்பூர் கோட்ட அஞ்சலகத்தில் உதவி கண்காணிப்பாளராக 1995- 1996 வரை பணிபுரிந்து வந்தேன். சாதாரணமாக எங்கள் எல்லைகுட்பட்ட அஞ்சலகத்திற்கு செல்வது வழக்கம். அப்படி ஒரு நாள் பல்லடம் அஞ்சலகத்திற்க சென்று நான் பணம் மற்றும் தபால் தலைகளை எண்ணி சரிபார்த்தேன் அப்போது பல்லடம் அஞ்சலக திரு. ராஜன் கேசியராக இருந்தார். நான் எண்ணிக்கை செய்தபோது ரூபாய் 4000 குறைவாக இருந்ததை கண்டுபிடித்தேன். அன்று இரவு எங்கள் கண்காணிப்பாளர் திருப்பூர் கோட்டம் அவர்களுக்கு ரிப்போர்ட் கொடுத்தேன். அவர் அடுத்த நாள் காலை பணத்தை சரி பண்ணிவிட்டால் மேற்கொண்டு நடவடிக்கையை நான் பார்த்துக்கொள்கிறேன் என்று சொன்னார்.

2) நான் விட்டுவிட்டு மற்ற வேலைகளை பார்த்தேன் இரண்டு நாள் கழித்து கண்காணிப்பாளர் அவர்கள் பல்லடம் துணை அஞ்சலகத்தில் சேமிப்பு கணக்கு வரவு செலவுகளை எதோ குறைபாடுகள் இருப்பதாக தெரிகிறது நீங்கள் சென்று பாருங்கள் என்று என்னிடம் சொன்னார். நான் பல்லடம் அஞ்சலகம் சென்று சில சேமிப்பு கணக்குகளை சோதித்து பார்த்தப்போது அதில் கையாடல் நடந்திருப்பது தெரியவந்தது. உடனே நான கண்காணிப்பாளரிடம் சொல்லி விட்டு வெரிபிக்கேசனை ஆரம்பித்தேன். எனக்கு துணைக்காக கோட்ட அலுவலக உதவி கண்காணிப்பாளர் தங்கவேலு அவர்களையும் , திருப்பூர் வடக்கு துணை கோட்ட ஆய்வாளர் திரு குருநாதன் அவர்களையும் துணைக்கு வைத்துக்கொண்டு 100 சதவீத விசாரணையை மேற்கொள்ளுமாறு கூறினார். அதன்படி அன்றுமுதல் மூவரும் கணக்கு வைப்பீட்டாளர்களிடமிருந்து பாஸ் புத்தகங்களை பெற்று புத்தகத்தோடு அஞ்சலக ரெக்கார்டுகளை சரிபார்த்தப்போது கையாடல் நடந்தது உறுதி செய்யப்பட்டது. அவ்வாறாக நாங்கள் 57 பாஸ்புத்தகங்களையும் கணக்குவைப்பீட்டாளர்களை விசாரித்தோம். அவர்களிடம் வாக்குமூலங்கள் வாங்கினோம். அந்த சமயத்தில் திரு.ராஜன் எங்களுடன் ஒத்துழைக்காமல் தலைமறைவாகிவிட்டார். பணம் ஏதும் அவரிடம் இருந்து வசூல் செய்யப்படவில்லை. அதன் காரணமாக எங்கள் மேல் அதிகாரிகள் அனைத்து வைப்பீட்டாளர்களையும் அது சம்மந்தமான ரெக்கார்டுகளையும் போலீஸிடம் கொடுத்து வழக்கு பதிவு செய்ய சொன்னார்கள்.

3) அதன் பிறகு நானும் தங்கவேலு அவர்களும் போலீசிடம் புகார் கொடுத்தோம். திரு .ராஜன் அஞ்சலக எழுத்தராகவும், திரு. சி.ஆர்.மணி அவர்கள் போஸ்ட் மாஸ்ட்ராகவும் பணி செய்தனர். திரு.ராஜன் கையாடல் செய்த தொகை ரூ.4,92,447/- ஆகும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஏற்கனவே குறியீடு

செய்யப்பட்ட அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.57 ஆவணங்கள்எங்களால் ஆய்வு செய்யப்பட்டவை ஆகும்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

1) ”"சாதாரணமாக எங்கள் எல்லைகுட்பட்ட அஞ்சலகத்திற்கு செல்வது வழக்கம்.அப்படி ஒரு நாள் பல்லடம் அஞ்சலகத்திற்க சென்று நான் பணம் மற்றும் தபால் தலைகளை எண்ணி சரிபார்த்தேன் அப்போது பல்லடம் அஞ்சலக திரு. ராஜன் கேசியராக இருந்தார். நான் எண்ணிக்கை செய்தபோது ரூபாய் 4000 குறைவாக இருந்ததை கண்டுபிடித்தேன். அன்று இரவு எங்கள் கண்காணிப்பாளர் திருப்பூர் கோட்டம் அவர்களுக்கு ரிப்போர்ட் கொடுத்தேன். அவர் அடுத்த நாள் காலை பணத்தை சரி பண்ணிவிட்டால் மேற்கொண்டு நடவடிக்கையை நான் பார்த்துக்கொள்கிறேன் என்று சொன்னார்”, என்ற விவரங்களை ஆய்வாளர் விசாரித்தப்போது கூறினீர்களா என்றால் சொல்லவில்லை.நான் ஆய்வு செய்தது 1995-1996 ஆகும் மாதம் தேதி தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. அப்போதைய கண்காணிப்பாளர் பெயர் என்ன என்றால் ஓ.பி. நாரயணசாமி ஆவார். நான் கொடுத்த ரிப்போர்ட் எழுத்து மூலமானதா என்றால் வாய்வழியாக சொன்னேன்.

2) நான் எனது முதல் விசாரணையில் " இரண்டு நாள் கழித்து கண்காணிப்பாளர் அவர்கள் பல்லடம் துனை அஞ்சலகத்தில் சேமிப்பு கணக்கு வரவு செலவுகளை எதோ குறைபாடுகள் இருப்பதாக தெரிகிறது நீங்கள் சென்று பாருங்கள் என்று என்னிடம் சொன்னார். நான் பல்லடம் அஞ்சலகம் சென்று சில சேமிப்பு கணக்குகளை சோதித்து பார்த்தப்போது அதில் கையாடல் நடந்திருப்பது தெரியவந்தது. உடனே நான கண்காணிப்பாளரிடம் சொல்லி விட்டு வெரிபிக்கேசனை ஆரம்பித்தேன். எனக்கு

துணைக்காக கோட்ட அலுவலக உதவி கண்காணிப்பாளர் தங்கவேலு அவர்களையும் , திருப்பூர் வடக்கு துணை கோட்ட ஆய்வாளர் திரு குருநாதன் அவர்களையும் துணைக்கு வைத்துக்கொண்டு 100 சதவீத விசாரணையை மேற்கொள்ளுமாறு கூறினார்" என்று சொல்லும் இந்த விசயங்களை போலீசாரிடம் தெரிவத்தேனா என்றால் அவரிடம் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. என்னையும் திரு . தங்வேலு அவர்களையும் திரு.குருநாதன் அவர்களையும் பல்லடம் துணை அஞ்சலகத்தில் சேமிப்பு வரவு செலவு கணக்குகள் குறித்து 100 % விசாரணயை மேற்கொள்ளுமாறு கண்காணிப்பாளர் எழுத்து மூலமாக உத்தரவு பிறப்பித்தாரா என்றால் எழுத்துமூலமாக இல்லை வாய்மூலமாக சொன்னார்.

3) எனது முதல் விசாரணையில் "அதன்படி அன்றுமுதல் மூவரும் கணக்கு வைப்பீட்டாளர்களிடமிருந்து பாஸ் புத்தகங்களை பெற்று புத்தகத்தோடு அஞ்சலக ரெக்கார்டுகளை சரிபார்த்தப்போது கையாடல் நடந்தது உறுதி செய்யப்பட்டது. அவ்வாறாக நாங்கள் 57 பாஸ்புத்தகங்களையும் கணக்குவைப்பீட்டாளர்களை விசாரித்தோம். அவர்களிடம் வாக்குமூலங்கள் வாங்கினோம். அந்த சமயத்தில் திரு.ராஜன் எங்களுடன் ஒத்துழைக்காமல் தலைமறைவாகிவிட்டார். பணம் ஏதும் அவரிடம் இருந்து வசூல் செய்யப்படவில்லை" என்பதை காவல் ஆய்வாளரிடம் தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். போலீசாரிடம் புகாரை நானும், தங்கவேலும் மற்றும் குருநாதனும் சேர்ந்து கையொப்பம் செய்து கொடுத்தோமா என்றால் ஆமாம்.

4) நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் நானோ அல்லது திரு. தங்வேலு மற்றும் குருநாதன் ஆகியோர் விசாரணை எதும் மேற்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. தங்கவேலு தயாரித்த ஆவணங்கள் அனைத்திலும் நான் கையொப்பமிட்டு உயர்

அதிகாரிகள் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி ராஜன் கையாடல் எதும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2025.07.28 18:31:30 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.

வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 234 of 2003

வழக்கு சாட்சி - PW 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.குருநாதன் | தொழில் | : | அஞ்சல் துறை இயக்குனர் புவேனஷ்வர் ஒடிஸா (ஓய்வு) |
| தந்தை பெயர் | : | கணபதி | வயது | : | |
| கிராமம் | : | கோவை கே எண் ஜி புதூர் பிரிவு | | | |
| தாலுக்கா | : | கோவை | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 28.07.2025.

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை :** **நாள் : 28.07.2025.**

1) நான் தற்போது அஞ்சல் துறை இயக்குனர் புவேனஷ்வர் ஒடிஸா (ஓய்வு) பணிபுரிந்து ஓய்வுப்பெற்று குடியிருந்துவருகிறேன். கடந்த 1994 ல் திருப்பூர் வடக்கு உட்கோட்ட ஆய்வாளராக அஞ்சல் துறையில் பணிபுரிந்தேன். அப்போது பல்லடம் துனை அஞ்சலகத்தில் சேமிப்பு கணக்குகளில் தவறு நடந்துள்ளதாகவும், அதை சோதனை செய்து விசாரணை செய்வதற்காக கண்காணிப்பாளர் அவர்களால் அறிவுருத்தப்பட்டு நான், திரு.எஸ்.தங்வேலு, கிருஷ்ணக்குமார் ஆகியோருடன் இணைந்து பல்லடம் துனை அஞ்சலகத்தில் இருந்த சேமிப்பு கணக்குகளை சரிபார்த்தோம். அதில் அப்போது சேமிப்பு வங்கி உதவியாளராக இருந்த திரு.ராஜன் அவர்களால் அந்த காலகட்டத்தில் 57 கணக்குகளில் மொத்தம் ரூ4,92,447/- முறைகேடு செய்திருப்பதை கண்டறிந்தோம். அது குறித்து திரு. தங்கவேலு அவர்கள் கண்காணிப்பாளரின் அறிவுறுத்தலின் பேரில்காவல் துறைக்கு புகார் செய்தார்.

2) நானும் இந்த விசாரணையில் சம்மந்தபட்டிருந்ததால் பல்லடம் காவல் துறை

ஆய்வாளர் என்னிடமும் வாக்குமூலம் பதிவு செய்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் எற்கனவே குறியீடு செய்யபட்டுள்ள அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.57 வைப்பீட்டாளர்களின் ஆவணங்களை நான் ஆய்வு செய்து அதில் கையொப்பம் தெய்தேன் அதில் தங்கவேலு மற்றும் கிருஷ்ணக்குமார் கையொப்பம் செய்துள்ளார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :

1) பல்லடம் துனை அஞ்சலகத்தில் உள்ள சேமிப்பு கணக்குகளை ஆய்வு செய்ய சொல்லி உத்தரவிட்டவர் யார் என்றால் திரு. ஓ.பி . நாரயணசாமி திருப்பூர் அஞ்சல் கண்காணிப்பாளர் திருப்பூர் கோட்டம் ஆவார். அவர் உத்தரவுகளை எவ்வாறு கொடுத்தார் என்றால் எழுத்து மூலமாக கொடுத்தார். நான் ஆய்வு முடித்த பிறகு ஆய்வு முடிவுகள் குறித்து தனியாக எழுத்து மூலமாக திருப்பூர் அஞ்சல் கண்காணிப்பாளரிடம் அறிக்கை கொடுத்தீர்களா என்றால் நான் தனியாக கொடுக்கவில்லை எங்கள் குழுவின் தலைவர் தங்கவேலு அவர்கள் எழுத்துமூலமான அறிக்கை கொடுத்தார். அந்த அறிக்கையில் நான் கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை ஆனால் நான் டைப் செய்தேன்.

2) நான் கிருஷ்ணக்குமார், மற்றும் தங்கவேலு ஒன்றாக சேர்ந்து ஆய்வு மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. தங்கவேலு தயாரித்து வைத்து ஆவணங்களில் பின்னிட்டு நானும் கிருஷ்ணக்குமார் அவர்களும் கையொப்பம் செய்து கொடுத்தோம் என்றால் சரியல்ல. நான் மற்றும் கிருஷ்ணக்குமார் முன்னிலையில் கணக்கு வைப்பீட்டாளர்கள் மற்றும் எதிரி ராஜன் மற்றும் அஞ்சலக துனை அதிகாரி மணி ஆகியோர் வாக்குமூலம் எதும் தரவில்லை என்றாலும் எங்கள் முன்னிலையில் அவ்வாறான வாக்குமூலம் எதும் பதிவு செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல்

ராஜன் எந்த கையாடல் முறைகேடுகளில் ஈடுபடவில்லைஎன்றாலும் உயர் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கினங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2025.07.28 18:31:41 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.